# திட்டமிட்டு குழு ஆராதனையை தலைமை ஏற்று நடத்துபவர்களுக்கும் அவர்களுடைய உதவியாளர்களுக்குமான வழிகாட்டுதல்கள்

தேவனை உயர்த்திப் போற்றும்படியாகவும், விசுவாசிகளை போதிக்கும்படியாகவும், இயேசுவைத் தேடுவோரை கொண்டு வரும்படியாகவும், துதியாராதனைகளைத் திட்டமிடுங்கள். ஜெபித்தும், தேவ வார்த்தைகளைப் படித்தும், ஆராதனையை வழிநடத்தும் தலைவர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த வழிகாட்டுதல்களைப் பயன்படுத்தி, தங்கள் உதவியாளர்களோடு அமர்ந்து அவர்கள் முன்கூட்டியே ஆராதனை நடவடிக்கைகளைத் திட்டமிட வேண்டும்.

**1. குழுவின் அளவுக்கு ஏற்றபடி ஆராதனையின் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.**

- சபைகள் சிறு குழுக்களாகவே பெரும்பாலும் ஆரம்பிக்கின்றன. ஒரு சிறு குழுவான புதிய விசுவாசிகளுக்கு ஏற்றபடியே ஆராதனை இருக்க வேண்டும்.
- மந்தையில் உள்ள யாவரும் முழுமனதுடன் பங்கேற்க வேண்டும். சும்மா பார்த்தும் கவனித்துக் கொண்டு இருக்கக் கூடாது. ஒரு பெரிய கூட்டத்தை விடவும் எளிதாக ஒரு சிறு குழு உற்சாகமான ஆராதனையை நடத்த முடியும் என்பதே உண்மை.
- இசை எவ்வளவு சிறப்பாக இருக்கிறது, ஆராதனைத் தலைவர் சிறப்பாக நடத்துகிறார் என்பவைகளை சிந்தியாமல் துதிக்கும்போது மக்கள் தேவனை மட்டுமே நினைக்கும்-படியாக அவர்களுக்கு உதவ வேண்டும்.
- தேவனை முன்னிலைப் படுத்தும் பாடல்களையும், பிற ஆராதனை நடவடிக்கைகளையும் தெரிந்து கொள்ளுங்கள். மக்கள் என்ன செய்ய வேண்டும் அல்லது எதைக் கற்க வேண்டும் என்பதை முன்னிலைப் படுத்தும் செயல்பாடுகள் ஆராதனையின் பிற அம்சங்களுக்கு நல்லதே தவிர, துதிக்கும் சமயத்திற்கு ஏற்றவைகள் அல்ல.
- விலையுயர்ந்த இசைக்கருவிகள் வேண்டும், அற்புதமாக இசைபாடும் இசைக்கலைஞர்கள் வேண்டும் என்றெல்லாம் சிந்திப்பதை விட்டு விடுங்கள். இப்படிப்பட்ட ஆராதனையில் மக்கள் பாடுவதையும் துதிப்பதையும் விட்டுவிட்டு, சும்மா நின்று கேட்கத் தொடங்கிவிடுவார்கள். தேவனை வியந்து துதிப்பதை விட்டு விட்டு மக்கள் ஆராதனையை வழி நடத்துபவரை போற்றுவதை தவிர்க்க வேண்டும்.

**2. சூழ்நிலைக்கும், உங்கள் மக்களுக்கும், அவர்களுடைய தேவைகளுக்கும், அவர்களுடைய சம்பிரதாயங்களுக்கும் பொருத்தமான ஆராதனை நடைமுறைகளைத் தேர்ந்தெடுங்கள்.**

- எப்பொழுதும் ஒரே மாதிரியாகவே இருக்கும் நடைமுறைகளைத் தவிர்க்கவும். ஏனெனில் இது ஆவியானவரின் வழிகாட்டுதலை சுதந்திரமாக விசுவாசிகள் பின்பற்றுவதை மட்டுப்படுத்தும். புதிய மேய்ப்பருக்கான ஒவ்வொரு பவுல்-தீமோத்தேயு பாடமும், ஆராதனைக்கு தெரிந்தெடுக்கக் கூடிய பலவகையான நடவடிக்கைகளைக் கூறுகிறது.
- உதவியாளர்களுடன் சேர்ந்து ஆராதனை நடவடிக்கைகளை ஜெபித்து முன்கூட்டியே திட்டமிடுங்கள்.
- பிற கலாச்சாரங்களில் இருந்து தலைவர்கள் ஆராதனை முறைகளை இறக்குமதி செய்வதையும், தற்போதைய தேவைகளுக்கும், உள்ளூர் சம்பிரதாயங்களுக்கும் பொருத்தமானபடி ஆராதனை முறைமைகளை ஒருபோதும் மாற்றாது இருப்பதையும் தவிர்க்க வேண்டும்.
- ஆராதனையில் அவிசுவாசிகள் கலந்து கொண்டிருந்தால், அவர்கள் கிறிஸ்துவை அறிந்து அவரை நம்ப உதவும்படியான செயல்பாடுகளை சேர்க்க வேண்டும்.
- இரட்சிப்பைத் தேடுவோர்க்கு உதவும்படியாகக் கூட தங்கள் திட்டங்களை ஒருபோதும் மாற்றாமலும், ஆராதனையின் ஒவ்வொரு செயல்பாட்டையும் திட்டமிட்டு செயல்படுவதையும் தலைவர்கள் தவிர்க்க வேண்டும்.
- பிறர் ஆராதனையை வழி நடத்தினாலும், கவனமுள்ள முதியோர்கள், ஆதாதனை எவ்வாறு நடத்தப்படுகிறது என்பதை மேற்பார்வை செய்ய வேண்டும். முதியோர்கள், இளைஞர்களையும், பிள்ளைகளையும் கூட்டத்தின் சில பகுதிகளை தலைமை ஏற்று நடத்தும்படி கேட்டுக்கொள்ள வேண்டும்.

- பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் பாடத்தை ஆயத்தம் செய்ய அதிக நேரம் உண்டு. அதற்காக அவர்கள் சபைக்கூட்டத்தில் ஆதிக்கம் செய்ய அனுமதிக்கக் கூடாது. இவ்வாறு செய்தால் அதைவிட நன்கு வழிநடத்தக் கூடிய முதிர்ச்சி வாய்ந்த மக்கள் பின்னுக்கு தள்ளப்படும் நிலை ஏற்பட்டு விடலாம்.

**3. எல்லா விசுவாசிகளும் ஈடுபாட்டுடன் பங்கேற்க அனுமதிக்கவும்**

- எல்லா வயதுடைய பிள்ளைகளும் பங்கேற்கட்டும். மேய்ப்பர்களுக்கு உரியதல்லாத பாடப்பொருளுக்கு சம்பந்தப்பட்ட வேதாகமக் கதைகள் பவுல்-தீமோத்தேயுவின் பிள்ளைகளுக்கான பாடத்திட்டத்தில் உண்டு. இதனால் பெரியவர்களுக்காக பிள்ளைகள் அதை நடித்துக் காட்ட முடியும். பிள்ளைகளுக்கான பாடத்தில் கவிதைகள் உண்டு. இது பொதுவாக சங்கீதத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகும். பிள்ளைகள் இவற்றைப் பாடலாம். கேள்விகளும் இருக்கும். இதை இவர்கள் பெரியவர்களிடத்தில் கேட்கலாம். பெரும்பாலும் அல்லது முழுவதும் பிள்ளைகள் தனி அறையில் இருப்பதை தவிர்க்க வேண்டும். அவர்கள் போதனையிலும், துதியிலும் பங்கேற்கட்டும்.
- ஆராதனையின் முழு நேரத்தையும் முக்கியமான தலைவர் அல்லது தலைவர்களே ஆக்கிரமிப்பதை தவிர்க்க வேண்டும். யாவரும் ஒருவருக்கொருவர் அறிந்து ஒருவரில் ஒருவர் அன்பு செலுத்த வேண்டும்.
- பெரியவர்களே, போதிப்பது மற்றும் திட்டங்கள் முழுவதையும் செய்வதை தவிர்க்க வேண்டும். வளர்ச்சியடைந்த பிள்ளைகள் இதனால் சோர்வடைந்து வேண்டாத காரியங்களில் ஈடுபடக்கூடும். புதிய ஏற்பாட்டின் ‘ஒருவருக்கொருவர்’ கட்டளைகளுக்கு துதிப்பவர்கள் கீழ்ப்படிய உதவுங்கள்.
- கிறிஸ்துவுக்காக தாங்கள் செய்து கொண்டிருப்பதை சபைக்கு அறிவிக்க விசுவாசிகளுக்கு சந்தர்ப்பம் அளியுங்கள்.
- இரண்டு, மூன்று அல்லது நான்கு பேர் அடங்கிய சிறு குழுக்களில் விசுவாசிகள் பேசவும் சேர்ந்து ஜெபிக்கவும் அனுமதியுங்கள். இப்படி செய்வதால், தாங்கள் சொல்லுவது கேட்கப்படவும், அவர்களே கேள்விகளைக் கேட்கவும், செயல்பாடுகளைத் திட்டமிடவும், மற்றவர்களுக்கு ஆலோசனை கூறவும், ஜெபிக்கவும் எல்லோருக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. பிரச்சினை உள்ளவர்களோடும் தங்களைப் பற்றி தாழ்வாக எண்ணுபவர்களோடும் விசுவாசிகள் நேரத்தை செலவழிக்க வேண்டும். நோயாளிகளுக்காகவும், அவிசுவாசிகளுக்காகவும், ஒருவருக்கு ஒருவர் ஜெபிக்க வேண்டும்.
- முழு நேரத்தையும் திட்டமிட்ட செயல்களுக்காகவே செலவிடுவதை தவிர்க்க வேண்டும். ஒருவரோடு ஒருவர் ஐக்கியமாய் இருந்து, மகிழ்ச்சி அடைவதற்கும், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும் நேரம் ஒதுக்க வேண்டும். இந்த நேரத்தில் திட்டமிட்ட செயல்பாடுகளை திணிக்கக் கூடாது. அவசரப்படாமல் ஒருவரோடு ஒருவர் உரையாடி, ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கட்டும்.
- இதை செய்வதற்கு குழுவை சிறியதாக வைத்துக் கொள்ள வேண்டும். புதிய குழுக்களை ஆரம்பிப்பது மூலம் இதை நிறைவேற்றலாம்.
- வட்டமாக அமர்ந்து கொள்ளுமாறு நாற்காலிகளைப் போடவும். மற்றவர்களின் தலையை மட்டும் பார்க்கும்படி வகுப்பறையில் மாணவர்கள் அமர்வது போல் விசுவாசிகள் சும்மா அமர்ந்திருப்பதை தவிர்க்கவும்.
- விவாதத்தில் ஒரு சிலரே ஆக்கிரமிப்பதை அனுமதிக்கக் கூடாது. விவாதத்தின் போது அதிகமாகப் பேசி, குற்றம் கூறுபவர்களை தலைவர்கள் திருத்த வேண்டும். அதிகமாகப் பேசிக் கொண்டே இருப்பவர்களிடம் இருந்து கவனத்தைத் திருப்பும் படியாகத் தலைவர்கள், “இதுவரை பேசாதவர்கள் பேசலாமே” என்று கூறலாம். எல்லோரும் சுதந்திரமாகப் பேசி தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள உதவி செய்ய வேண்டும்.
- குழுவின் கவனத்தை எப்போதும் கவரும் படியாக சில மக்கள் நடந்து கொள்ளுவதைத் தவிர்க்க வேண்டும். சிலர் தங்களது பிரச்சினைகளைப் பற்றியே எல்லா கூட்டத்திலும் கூறுவார்கள்.
- மோசமான சூழ்நிலையால் பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் என்பதில் அவர்கள் சுவை காண்கிறார்கள். இன்னும் சிலர் உண்டு. எந்தத் தலைப்பின் கீழும் தாங்களே இறுதி வார்த்தையைப் பேச வேண்டும் என்ற வறட்டு பிடிவாதத்தில் பெருமை கொள்பவர்கள் இவர்கள்.

வேதாகமத்தை நாடகப் பாணியில் வாசிக்கவும் நடிக்கவும் விசுவாசிகளுக்குப் போதிக்க வேண்டும். பல வேதாகமக் கதைகளில் மக்களிடையே நடைபெறும் உரையாடல்கள் உண்டு. உரையாடல் இல்லாத பகுதியை கதை சொல்லுபவர் வாசிக்கலாம். உதாரணமாக

ஒரு கதை சொல்லுபவர் ஆதியாகமம் 3ன் பகுதிகளை வாசிக்கிறார்.
ஒருவர் ஆதாம் சொல்லுவதையும் செய்வதையும் வாசித்து நடித்துக் காட்டுகிறார்.
ஒரு பெண் ஏவாளின் பாத்திரத்தை எடுத்துக் கொள்ளுகிறார்.
இன்னொருவர் சாத்தானின் பாத்திரத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்.
மேலும் ஒருவர் தேவனின் வார்த்தைகளைப் பேசுகிறார்.

**4. சபையில் விசுவாசிகள் ஒருவருக்கு ஒருவர் அன்போடு சேவை செய்ய ஏதுவாகப் பரிசுத்த ஆவியானவர் வெவ்வேறு ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்துவதில் ஒற்றுமையைக் கொண்டு வருவாராக.**

- 1 கொரிந்தியர் அதிகாரங்கள் 12 ம் 13 ம், பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொருவருக்கும் கொடுத்துள்ள ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்தக் கூறுகிறது. இப்படி பயன்படுத்தும் போது விசுவாசிகள், சரீரத்தின் அவையங்களைப் போன்று அன்போடு ஒன்றியைந்து செயல்பட வேண்டும். தனித்த நிகழ்ச்சிகளை நடத்துவதை தவிர்க்க வேண்டும். இதனால் வெவ்வேறு ஆவிக்குரிய வரங்களை உடைய விசுவாசிகள் ஒருவருக்கு ஒருவர் ஐக்கியம் ஆக முடியாமல் தனிமைப்பட்டு போவார்கள். மரபான சபைகளில் நடப்பது போல், ஒரே ஆவிக்குரிய வரங்களை உடையவர்கள் ஓரணியாய் திரண்டு அவர்களுக்கேற்ற ஊழியங்களில் வளர்ச்சியடைவர்களே யானால், பிற வரங்களை உடையவர்களோடு தொடர்பு அற்றுப் போகும்.
- அந்த வாரம் நடைபெற வேண்டிய வேலைகளை ஆராதனையின் போது விவரித்துச் சொல்லவும். அந்த வாரத்து பாடத் தலைப்போடு பொருந்தும் சில செயல்பாடுகளை சேர்த்துக் கொள்ளவும். மக்களுக்கு சேவை செய்வதில் ஏற்படும் எதிர்பாராத தேவைகளையும், வாய்ப்புகளையும் சந்திக்குமாறு பிற செயல்பாடுகள் அமைய வேண்டும்.
- விசுவாசிகள் உதவி தேவைப்படும் தங்களது அயலகத்தாரையும், நண்பர்களையும் பற்றி கூறி அவர்களுக்கு எவ்வாறு சேவை செய்யப் போகிறார்கள் என்பதையும் கூறலாம்.
- விசுவாசிகள் தாங்கள் செய்யும் பணிகளைப் பற்றி கூறி அதைப்பற்றி விவாதிக்க வேண்டும். அதற்கான சரியான திட்டங்களையும் அதற்கு யார் உதவி செய்யப்போகிறார்கள் என்பதையும் தீர்மானிக்க வேண்டும். அந்தத் திட்டங்களில் பின் வருவன சேர்க்கப்படலாம்.

  ஒருவருக்காக ஒருவரும், நோயாளிகளுக்காகவும், அவிசுவாசிகளுக்காகவும், அசுத்த ஆவி பிடித்தவர்களுக்காகவும் ஜெபித்தல்,

  ஐக்கியம்,

  சபையோடு ஒத்துழைத்தல்,

  தேவையில் இருப்போருக்கு சேவை செய்தல்,

  குடும்ப ஜெபம்
- புதிய ஏற்பாட்டின் 'ஒருவருக்கொருவர்' கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து சபைக்குள்ளும், சபைகளுக்குள்ளும் ஐக்கியத்தைக் கட்டுதல்.

**அன்பு:**

- ஒருவரில் ஒருவர் அன்பு கூருங்கள் : யோவான் 13:34-35; 5:12, 17; ரோமர் 12:10; 1 தெச. 4:9; 1 யோவான் 3:11, 14, 23; 4:7, 11, 12; 2 யோவான் 1:5; 1 பேதுரு 1:22.
- ஒருவரில் ஒருவர் அன்புகூர்ந்து நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றுதல் : ரோமர், 13:8
- ஒருவரிடத்தில் ஒருவர் வைத்திருக்கும் அன்பு பெருகுதல்: 1 தெச. 3:12
- ஒருவரில் ஒருவர் ஊக்கமான அன்போடு இருத்தல், அன்பு திரளான பாவங்களை மூடும்:1 பேது. 4:8.

**ஐக்கியமும் ஒப்புரவும்:**

- ஒருவரோடு ஒருவர் ஐக்கியமாயிருத்தல்: 1 யோவான் 1:7.
- ஒருவரை ஒருவர் மன்னித்தல் : எபே. 3:13; 4:32; கொலோ. 3:13.
- ஒருவரை ஒருவர் பரிசுத்தத்தோடு வாழ்த்துதல்: ரோமர் 16:16; 1 கொரி. 16:20; 2 கொரி. 13:12, 1 பேதுரு 5:14
- போஜனம் பண்ண வரும்போது ஒருவருக்கு ஒருவர் காத்திருத்தல்: 1 கொரி. 11:33
- ஒருவர் துன்பத்தை ஒருவர் தாங்குதல் 1 கொரி. 12:26.

**சேவை செய்தல்:**

- அவனவன் பெற்ற வரத்தின்படி ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தல்: 1 பேது. 4:10.
- அன்பினாலே ஒருவருக்கு ஒருவர் ஊழியம் செய்தல்: கலா. 5:13
- ஒருவருக்கொருவர் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்: 1 தெச 5:15
- ஒருவருக்காக ஒருவர் கவலைப்படுங்கள் 1 கொரி. 12:25

- ஒருவர் பாரத்தை ஒருவர் சுமத்தல்: கலா.6:2
- தாழ்மையாக ஊழியம் செய்வதற்கு அடையாளமாக ஒருவர் காலை ஒருவர் கழுவுதல் - யோவான் 13:14
- ஒருவரோடு ஒருவர் இணைந்து பணியாற்றுங்கள் 1 கொரி. 3:9; 2 கொரி 6:1

**போதித்தல்:**

- ஒருவருக்கொருவர் போதனை செய்தல்: கொலோ. 3:16
- ஒருவருக்கொருவர் புத்திமதி கூறுதல்: ரோமர் 5:14

**ஊக்குவித்தல்:**

- ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுதல்: கொலோ 3:16; எபி. 10:25
- ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுதல்: எபி. 3:13
- ஒருவருக்கொருவர் உண்மை பேசுதல்: எபே. 4:25
- ஒருவருக்கொருவர் ஜீவனைக் கொடுத்தல்: 1 யோவான் 3:16
- ஒருவரை ஒருவர் நேசித்து நற்காரியங்கள் செய்ய ஊக்குவித்தல்: எபி 10:24

**ஜெபித்து, பாவத்தை அறிக்கையிட்டு, போதித்தல்:**

- ஒருவருக்கொருவர் ஜெபித்தல்: யாக். 5:16
- நமது பாவங்களை ஒருவருக்கு ஒருவர் அறிக்கை இடுதல்: யாக்.5:16
- ஒருவருக்கொருவர் தேற்றுதல் (பலப்படுத்துதல், கட்டுதல்) 1 தெச 4:18 & 5:1, 11
- ஒருவருக்கொருவர், சங்கீதத்தாலும், போதகத்தாலும், வெளிப்படுத்தலினாலும், பாஷையினாலும், வியாக்கியானத்தினாலும் பக்திவிருத்தி அடையச் செய்தல் 1 கொரி. 14:26
- சேர்ந்து தேவனை மகிமைப்படுத்துதல், ரோமர். 15:6

தாழ்மையுடன் ஒற்றுமையைக் கட்டுதல்:

- ஒருவரை ஒருவர் கனம் பண்ணுதல்: ரோமர் 12:10
- ஒருவரோடு ஒருவர் ஒரே மனதுடன் இருத்தல்: 2 கொரி. 13:11; ரோமர் 12:16; 15:5
- ஒருவருக்கொருவர் குறை கூறாமல் இருத்தல் ரோமர் 14:13
- ஒருவரைப் பற்றி ஒருவர் மோசமாகப் பேசாது இருத்தல்: யாக் 4:11; 5:9
- ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதல்: எபே. 5:21
- ஒருவருக்கு ஒருவர் மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுதல்: 1 பேது. 5:5

**ஒற்றுமையாய் வாழ்தல்:**

- ஒருவருக்கொருவர் பொறுமையோடு இருத்தல்: எபே. 4:2
- ஒருவரோடு ஒருவர் சமாதானமாக வாழ்தல்: மத். 9:50
- ஒருவருக்கொருவர் அன்போடு ஏற்றுக்கொள்ளுதல்: ரோமர் 15:7; 1 பேதுரு 4:9

**5. இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தைப் பரிசுத்த ஆவியானவர் யாவரும் உணரும்படிச் செய்யும் வகையில் கர்த்தரின் பந்தியை ஆசரிக்கவும்.**

- கர்த்தரின் பந்தியை வகைவகையான உற்சாகம் அளிக்கும் வேத பாடங்களுடன் பவுல் - தீமோத்தேயு பாடங்கள் அறிமுகம் செய்கின்றன. கர்த்தரின் பந்தியைப் பரிமாறும் முன் விசுவாசிகள் ஜெபத்துடன் தங்கள் பாவங்களை தேவனிடம் அறிக்கை செய்ய நேரம் ஒதுக்குங்கள். தனிப்பட்ட பாவங்களை அமைதியாக அறிக்கை இடவும். எதற்காகப் பாவத்தை அறிக்கை இட வேண்டும் என்று யாராவது கேட்டால் அவர்களுக்கு 1 கொரிந்தியர் 11:27-31 ஐயும் யோவான் 1:7-10 ஐயும் காட்டவும். பாவத்தை அறிக்கையிடுவதற்கு உதாரணமாக சங். 51:1-10 ல் உள்ள தாவீதின் பாவ அறிக்கையை வாசிக்கலாம்.
- சில சபைகளில் ஒவ்வொருவருக்கும் ஒரே கப்பில் கொடுக்கின்றனர். விசுவாசிகள் ரொட்டியை திராட்சை ரசத்தில் முக்கி சாப்பிடுகின்றனர். சில சபைகளில் தனித்தனி கப்பை உபயோகிக்கின்றனர். சில சபைகளில் திராட்சை ரசமும், வேறு சிலவற்றில் அதற்குப் பதில் வேறு பானமும் தருகின்றனர். இந்தப் பல வகையான முறைகளும் ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளே.
- கர்த்தரின் பந்தியின் அற்புதமான இரகசியத்தை அனுபவிக்காமல் அதை வெறும் இன்னொரு போதனை நேரமாக மாற்றிவிடக் கூடாது.

- முதலில் விசுவாசிகள் பாவ அறிக்கை செய்யாமல் அதை அவசர அவசரமாக சபையார் எடுப்பதை தவிர்க்க வேண்டும்
- ஒரு விருந்தின் ஒரு பகுதியாக கர்த்தரின் பந்தியைப் பரிமாறக் கூடாது. இப்படிச் செய்வது இயேசுவின் சரீரத்தில் ஆராதனையோடு பங்கு கொள்ளும் வாய்ப்பை இழந்து போவது ஆகும். (1 கொரி 10:16). பவுல் இந்தத் தவறை 1 கொரி. 11:20-34 ல் திருத்துகிறார்.

6. **பல வடிவங்களில் துதியாராதனை அமையட்டும்.**

- அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகமாய் இருந்தால் விசுவாசிகள் அமைதியான முறையில் மெதுவான குரலில் பாடித் துதிக்கட்டும். அமைதியான முறையில் ஆராதனை என்கின்றபோது அதில், சமீபத்தில் தேவன் செய்தவை பற்றிய சாட்சிகள், வேத வாசிப்பு, தலைவர் கூறக்கூற திரும்பக் கூறுதல், கவிதை, நாடகம், பக்தி மயமான நடனம், அமைதியான தியானம் என்பவை அடங்கும்.
- இசையைத் துதி செய்வதற்கான ஒரே வடிவமாக வைப்பதைத் தவிர்க்க வேண்டும். துதியாராதனை சிறந்த இசை நிகழ்ச்சியாக நடத்தும்போது யாவரும் இதய பூர்வமாக தேவனைத் துதிக்க முடியாமல் போய்விடுகிறது. எல்லா வயதினருக்கும், அந்தந்தப் பிரதேச காலாச்சாரத்துக்கும் ஏற்ற ஒரு இசையோடு பாடவும். புதிய பாடல்களை எழுதுமாறு விசுவாசிகளை ஊக்குவிக்கவும். இன்னொரு கலாச்சாரத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாடல்களை மட்டுமே பாடுவதைத் தவிர்க்க வேண்டும்.

7. **துதியாராதனையின் போது விசுவாசிகள் தேவனின் மகத்துவம் வாய்ந்த பிரசன்-னத்தை உணர்ந்து பயபக்தியுடன் இருக்க வேண்டும்.**

குழு ஆராதனையின் போது ஒரு தீர்க்கமான முடிவும் ஆரம்பமும் இருக்க வேண்டும். ஆராதனையை ஆரம்பிக்கும் செயல்பாடுகளின் ஒரு பட்டியல் இதோ:

- ஆராதனையைத் துவக்க சங்கீதத்தில் இருந்தோ அல்லது வேறு துதித்துப் புகழும் வரிகளையோ உபயோகிக்க வேண்டும். வாசித்து துதியை ஆரம்பிக்கக் கூடிய சில வசனங்கள்:

| | | |
|---|---|---|
| சங். 8:1 | சங். 89:1 | சங். 123:1 |
| சங். 9:1-2 | சங். 95:1-3 | சங். 136:1-4 |
| சங். 18:1-2 | சங். 97:1 | சங். 147:1 |
| சங். 29:1-2 | சங். 98:1-2 | சங். 145:1-2 |
| சங். 34:1-3 | சங். 100 | சங். 148:1-2 |
| சங். 42:1 | சங். 104:1 | சங். 149:1-4 |
| சங். 47:1-2 | சங். 105:1-3 | சங். 150 |
| சங். 66:1-4 | சங். 113:1-6 | ஆபகூக் 2:20 |
| சங். 67:1-3 | சங். 103:1 | வெளி. 7:9-12 |
| சங். 81:1 | சங். 111:1-3 | வெளி. 2:7 |
| சங். 84:1-2 | சங். 117 | வெளி. 22:6-7 |

- உங்கள் இருதயத்தை ஆராதனைக்காக ஆயத்தப்படுத்தவும், கிறிஸ்து பிரசன்னத்தை உணர்த்தும்படியாகவும் பரிசுத்த ஆவியானவரை வேண்டிக் கொள்ளுங்கள்.
- யாவரும் தாங்கள் உண்மையிலேயே துதித்ததை உணரும்படியாகச் செய்யுங்கள்.
- மகா பரிசுத்தராகிய ஒரே தேவனின் மகத்துவமான பிரசன்னத்தை உணரத் தவறி, மிக சாதாரணமான, பழக்கமான சூழ்நிலையை நிலவுவதைத் தவிர்க்கவும்.
- அந்தப் பகுதியில் உள்ள பிற சபைகளுக்காக, அவைகள் மரபானவைகளாகவோ, வேறு விதமாக விஷயங்களை செய்பவைகளாகவோ இருந்தாலும், ஜெபிக்க வேண்டும்.

- பிற சபைகளை கோபத்தோடு விட்டு விலகி வந்து அவைகளைப் பற்றி அதி தீவிரமாக குற்றம் சொல்லும் மக்களை மென்மையாக திருத்தவும்.
- போதகர்களையும், வேறு விதமாக விஷயங்களைச் செய்யும் சபைகளையும் விமரிசிக்கும், குறைகூறும் ஆவியை உடைய மேய்ப்பர்களைத் தவிர்க்கவும்
- பிற சபைகள் செய்வதையும், நம்புவதையும் பற்றி கோபமாக உணர்வுகளை வெளிப்படுத்தும் விசுவாசிகளைத் தவிர்க்கவும்

8. **தேவனுக்குக் கொடுக்கும்படியான வாய்ப்பை விசுவாசிகளுக்குத் தரவும்**

- தேவ ராஜ்ய விரிவிற்காகவும், மக்களுடைய தேவைகளை சந்திக்கவும் காணிக்கைகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை விசுவாசிகள் அறிய வேண்டும். சிறு குழுக்களில் மற்றவர்கள் அறியாவண்ணம் கொடுக்கவே விசுவாசிகள் விரும்புவார்கள்.
- பணத்துக்காகக் கெஞ்சுவதைத் தலைவர்கள் தவிர்க்க வேண்டும். இது கொடுக்க இயலாதவர்களுக்கு மன உளைச்சலைத் தரும். மேலும் காணிக்கை எவ்வாறு செலவு செய்யப்படுகிறது என்பதைக் கூறுவதும் இல்லை.
- இயேசு விரும்புகிற படி மிகவும் அவசரமான தேவைகள் உள்ள விசுவாசிகளை ஆதரிக்காமல் தலைவர்கள் பொருட்களை வாங்குவதையும் தங்கள் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்து கொள்வதையும் தவிர்க்க வேண்டும்.
- சபையால் தேர்ந்தெடுக்கப்படும் பொருளாளர் சரிபார்க்கும் வகையில் கணக்குகளை எழுதி வர வேண்டும்.

9. **பெரும்பாலும் போதிக்கும் விஷயங்கள் நிறைந்த கூட்டங்களையே நடத்தவும்**

- ஜெபம் மற்றும் திட்டமிடும் வேளைகளில் மக்களைக் கட்டி எழுப்பும் காரியங்களிலேயே விசுவாசிகள் கவனம் செலுத்த வேண்டும். புதிய செயல்பாடுகளை அறிமுகப்படுத்துவதின் மூலம் இதைச் செய்ய முடியும். உதாரணமாக, புதிய விசுவாசிகளைத் தேடிக் கண்டுபிடிப்பது, ஞானஸ்நானம் அளிப்பது, சபைகளுக்குப் புதிய ஏற்பாடு கூறும்செயல்பாடுகளைத் துவக்குவது, புதிய சபைகளையும் குழுக்களையும் துவக்குவது, புதிய தலைவர்களைப் பயிற்றுவிப்பது, விசுவாசிகளையும் நண்பர்களையும் சென்று வாழ்த்தத் திட்டமிடுவது, துன்பத்தில் இருக்கும் மக்களுக்காக குழுக்களை அமைப்பது போன்றவைகளாகும்.
- நோய், கொள்கை மாறுபாடுகள், சமுதாயத்தில் இருக்கும் பாவங்கள், பொதுவான பிரச்சினைகள் போன்ற எதிர்மறையான விஷயங்களையே எப்போதும் பேசிக்கொண்டும் கவனம் செலுத்திக் கொண்டும் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். சபையை வளர்க்கும் நேர்மறையான விஷயங்களுக்கும் எப்போதும் நேரம் ஒதுக்க வேண்டும்.

Copyright © 2003 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net